## மயிலாப்பூர் - கபாலீசுவரர் திருக்கோயிலின் பயன்பாடற்ற 34 கிலோ 375 கிராம்

# பலமாற்று பொன் இனங்களை உருக்கி - சுத்தத் தங்கக் கட்டிகளாக மாற்றிடல்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஒப்படைத்தார்!

சென்னை, மார்ச் 2–

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் துரைசாமி ராஜு அவர்கள் முன்னிலையில் 27.02.2026 அன்று சென்னை, மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயிலில், பயன்பாட்டில் இல்லாத பிரித்தெடுக்கப்பட்ட 34 கிலோ 375 கிராம் எடையுள்ள பலமாற்றுப் பொன் இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியின் சென்னை தெற்கு வட்டார துணைப் பொது மேலாளர் பிரசாத் திடம் அடையாளச் சான்றாக ஒப்படைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் பக்தர்களிடமிருந்து காணிக்கையாகப் பெறப்பட்டு பயன்படுத்த இயலாத பலமாற்று பொன் இனங்களில் கல், அரக்கு, அழுக்கு நீக்கப்பட்டு, மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி, பாரத ஸ்டேட்

வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை செம்மையாக செயல்படுத்திடும் வகையில் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள். துரைசாமி ராஜு, ரவிச்சந்திர பாபு மற்றும் செல்வி மாலா ஆகியோரின் கண்காணிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ், இதுவரை 21 திருக்கோயில்களின் பயன்பாடற்ற பொன் இனங்களை உருக்கி கிடைக்கபெற்ற 1,074 கிலோ 123 கிராம் 488 மில்லிகிராம் சுத்தத் தங்கக் கட்டிகள் பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தில் அந்தந்த திருக்கோயிலின் பெயரில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் ஆண்டொன்றிற்கு 17 கோடியே 76 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் வட்டித் தொகையாக கிடைக்கப் பெறுகிறது. இந்த வட்டித் தொகை அந்தந்த திருக்கோயிலின் வளர்ச்சிப் பணிகளுக்கு செலவிடப்பட்டு வருகிறது.

மேலும், காஞ்சிபுரம், காமாட்சியம்மன் திருக்கோயில், குன்றத்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருவிடந்தை நித்யகல்யாண பெருமாள் திருக்கோயில், திருமலைவையாவூர் பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் திருக்கோயில் ஆகிய 4 திருக்கோயில்களிலிருந்து கிடைக்கப்பெற்ற 53 கிலோ 386 கிராம் எடையுள்ள பலமாற்று பொன் இனங்களை உருக்கி சுத்த கட்டிகளாக மாற்றிட பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் மும்பையிலுள்ள தங்க உருக்காலைக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் துரைசாமி ராஜு முன்னிலையில் மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயிலுக்கு காணிக்கையாக கிடைக்கப்பெற்று பயன்பாடற்ற 34 கிலோ 375 கிராம் எடையுள்ள பலமாற்று பொன் இனங்கள் உருக்கி சுத்தத் தங்கக் கட்டிகளாக மாற்றிட பாரத ஸ்டேட் வங்கியிடம் அடையாளச் சான்றாக ஒப்படைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் திருமதி இரா.வான்மதி, பெ.க. கவெனிதா, பாரத ஸ்டேட் வங்கியின் சென்னை மத்திய மண்டல மேலாளர் இன்பரசு, மாநகராட்சி மன்ற உறுப்பினர் திருமதி விமலா கிருஷ்ணமூர்த்தி, திருக்கோயில் அறங்காவலர்கள் ப.திருநாவுக்கரசு, எம்.பி.மருதமுத்து, சி.டி.ஆறுமுகம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வாகை மலர்களால் வாழ்த்துகிறோம்!



பள்ளிகளில்
காலை உணவுண்ணும்
குழந்தைகளின்
கண்களில் மின்னுகிறது
உன் பெயர்

மகளிர் உரிமைத்தொகை பெறும்
பெண்களின் கைகளில்
ரேகைகளாய்ப் பதிந்திருக்கிறது
உன் பெயர்

இலவச மருத்துவப் பயனாளிகளின்
புன்னகைகளில் ஒளிர்கிறது
உன் பெயர்

ஆளுயரக் கண்ணாடிபோல
தமிழரின்
வாழ்வுயரக் கண்ணாடி நீ

கீழடியிலிருந்து
எங்களுக்கு முன்பாக!
தமிழர்கள் எல்லாரும்
வெல்வோம் ஒன்றாக!

வாகை மலர்களால்
வாழ்த்துகிறோம்!



**கவிஞர் பழநிபாரதி**

## மார்ச் 9ஆம் தேதி திருச்சியில் நடைபெறும் கழக மாநாட்டில்

# திருவள்ளூர் மத்திய மாவட்டத்திலிருந்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

### மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

திருவள்ளூர் மார்ச் 2-

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. மாநகர. ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள். அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் ஆவடியில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜி தலைமையில் நடைபெற்றது தலைமை செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ். தொகுதி பார்வையாளர்கள் பி.டி.சி.செல்வராஜ், நிவேதா ஜெசிகா, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபுக ஜேந்திரன், மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட துணை செயலாளர்கள் வி.ஜெ. சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார். பொதுக்குழு உறுப்பினர்கள் கு.விமல்வர்ஷன், வி. குமார், ஜெ.மகாதேவன், எஸ். காஞ்சனாசுதாகர். எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் இதில் பகுதிச் செயலாளர் ஜி.நாராயண பிரசாத் வரவேற்புரையாற்றினார்

இதில் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆவடி சாமு நாசர் கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார் அப்போது பேசிய அவர்

தந்தை தெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமி ழறிஞர் கலைஞர் ஆகியோர் திராவிட இயக்கத்தின் வழித் தோன்றலாக திகழ்ந்து தமிழ் நாட்டை, தமிழ் மொழியை, தமிழ் மக்களை உலக அளவில் பெருமைப் பெறச் செய்தனர். இவ் மூவரின் வழித் தோன்றலாக, இம் மூவரின் உருவமாக நம் முன் இருப்பவர் நமது கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மட்டுமே. திராவிட இயக்கத்தின் மாபெரும் தலைவர்! இன்றைக்கு திராவிட இயக்கத்தின் மாபெரும் தலைவராகத் திகழ்ந்து, இந்தியாவிற்கே வழி காட்டும் முதல்வராக திகழ்ந்து, இந்தியாவிற்கு வழி காட்டும் நல் திட்டங்களை, மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்து வரும் நமது கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இன்று மார்ச் 1 ஆம் தேதி 73 வது பிறந்த நாள் ஆகும்.

அது மட்டுமின்றி இன்று மார்ச் 1 ஆம் தேதி அன்று காலை நமது மாவட்டத்தில் உள்ள மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் முதல் கிளைக் கழகங்கள் வரையில் ஆங்காங்கே உள்ள கழகக் கொடிக் கம்பங்களில் கழகக் கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு, சர்க்கரைப் பொங்கல் வழங்கி மகிழ்ச்சியுடன் கொண்டாடி வேண்டும். அன்று காலை ஆதரவற்றோர், அனாதை இல்லங்களில் காலை உணவு வழங்கிடவும், பிற்பகல் அறுசுவை உணவை, பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கப்படுகிறது. இனிப்பு, அறுசுவை உணவு வழங்கி ஏழை எளியோருக்கு நல உதவிகள், மரக்கன்று வழங்குதல், மரக்கன்று நடுதல், மருத்துவ முகாம், இரத்ததானம் அளித்தல் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் என்று இந்தச் சமுதாய மக்கள் நலன் பெறும் வகையில் நிகழ்ச்சி வழங்கிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

கழகத் தலைவர் புகழ் பாடுவோம் மேலும் இன்று மார்ச் 1 அன்று தந்தை பெரியர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் புகழ் ஓங்கிடும் வகையில் முழக்கங்களை எழுப்பிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மார்ச் 9ஆம் தேதி அன்று நடைபெறும் மாபெரும் திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர ஒன்றிய நகர பகுதிகளில் இருந்து 10,000க்கும் மேற்பட்டோர் பெருந்திரளாக கலந்து கொண்டு திரு வள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் பங்கேற்க வேண்டும் என்றார்.

# நன்முதல்வர் பிறந்ததால்; தமிழ்நாடு சிறந்ததுவே!



தென்றலும் நிலாவும் சந்தனமும் மெழுகும்
தனக்கின்றிப் பிறர்க்கேயாம் தன்மை போல,
என்றும் திகழ் எம் முதல்வர் ஸ்டாலின் இனிது வாழ்க!
எழுச்சிமிகு திமுக ஏற்றம் கொண்டு ஒளிர்க !
வென்றுவரும் பெண்களை உருவாக்கின் நாடுயருமென
விவேகானந்தர் சொன்னதையும் செய்தார் முதல்வர் ;
நன்றாகப் பேறுபெற்றது மார்ச் முதல்நாள்
நன்முதல்வர் பிறந்ததால் ; தமிழ்நாடும் சிறந்ததுவே !

உழைக்கிறாரே ஓயாமல் தமிழினம் ஒளிபெற;
உதயசூரியன் என்பது பொருத்தமான உவமையணி !
அழைக்கிறாரே இளையோரை நீயே முதல்வன் என
ஆர்வமும் பெருங்குணமும் பாரிலே புதுமையணி!
மழையென தன்மானம் சமூகநீதி செழித்தோங்க
மாண்புமிகு முதல்வர் பொழிகின்றார்; மகிழ்கின்றோம்!
தழைக்கிறது தமிழ்நாடு; தரமுயர்த்தும் தனித்தலைவர்
தன்னொப்பார் இல்லப்பர் ஸ்டாலினப்பா வாழ்கவே !

சோவியத் புரட்சிச்சேதி செவியில் கேட்டவுடன்
சேய் பிறந்த காரணத்தால் கலைஞர் 'ஸ்டாலின் என
நாவினிக்க நாமம் சூட்டியதால் நாடுபோற்ற
நல்லிரும்பு மனிதராய்த் தடையாவும் தகர்த்தாரே!
பூவிருக்கும் பொன்னுள்ளம் பல்கலையும் கல்லூரிகளும்
பள்ளியில் காலையுணவும் பகிர்ந்தளித்து மகிழ்ந்ததுவே!
யாவருமே நிரந்தர முதல்வரென நம்புகிறோம்;
எல்லாரும் வாழ்த்துகிறோம் ! நூறாண்டு வாழ்கவே!



**மருத்துவர் திருமதி**
**தாமரை ஹரிபாபு**
பள்ளத்தூர்- சிவகங்கை
மாவட்டம்



திருப்புவனத்தில் மேற்கு ஒன்றியம் பேரூர் திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு திருப்புவனம் கோட்டை பகுதியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்களுக்கு மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் வசந்தி சேங்கை மாறன். தலைமையில் பேரூர் கழக செயலாளர் நாகூர்கனி முன்னிலையில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் பேரூராட்சி மன்ற தலைவர் சேங்கை மாறன் இனிப்பு வழங்கி போர்வைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில். சேதுராஜன். ரகமத்துல்லாகான் ஏனாதி ராமலிங்கம். மாங்குடி வெங்கடேசன். சங்கங்குளம் ஈஸ்வரன். லாடனேந்தல் சுப்பையா. பூவந்தி அக்னிராஜ் மணிகண்டன். மடப்புரம் மகேந்திரன். புலியூர் ரவி. கரிசல்குளம் ராமு. கலியாந்தூர் இளங்கோவன் மீனாட்சிசுந்தரம். தேளி கோபால் அறிவுகரசு கண்ணன் மாரிதாசன் ராமலட்சுமி பாலகிருஷ்ணன் கோபி என்ற பாலகிருஷ்ணன்,காளிதாஸ் திருப்பதி கணேசன் கணேசபிரபு ராஜா ராஜா. அண்ணாமலை பாண்டியர் கிருஷ்ணன். நேரு. மற்றும் ஒன்றிய கழக. பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

# அமெரிக்காவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் 73வது பிறந்தநாள் விழா!

## கடல் கடந்து ஒலித்த திராவிட முழக்கம்!

வாஷிங்டன், மார்ச் 2 –

தமிழக முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு, அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் வசிக்கும் தமிழக மக்கள் மற்றும் திமுக அமெரிக்க அயலக அணியினர் (NRI Wing) இணைந்து மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடினர். தெற்கு, மேற்கு, கிழக்கு மற்றும் மத்திய மண்டலங்கள் என அமெரிக்கா முழுவதும் முதலமைச்சரின் சாதனைகளைப் போற்றும் வகையில் இந்த நிகழ்வுகள் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டன.

டெக்சாஸ் (தெற்கு மண்டலம்): பிளேனோ நகரில் திருவிழாக் கோலம்

டெக்சாஸ் மாநிலம் பிளேனோ நகரில் தெற்கு மண்டல அயலக அணி சார்பில் சிறப்பான கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

தெற்கு மண்டல துணை அமைப்பாளர் திரு. ஆனந்த் பழனிசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

அமைப்பாளர் டெக்ஸாஸ் பாண்டி, தமிழகத்தில் முதலமைச்சர் தலைமையில் நடைபெற்று வரும் 'திராவிட மாடல்' ஆட்சியின் சாதனைகள் மற்றும் உலகளாவிய தமிழர்களுக்கான நலத்திட்டங்கள்



குறித்து விரிவாக உரையாற்றினார்.

விழாவின் சிகர நிகழ்வாக கேக் வெட்டப்பட்டு, "தமிழினத் தலைவர் மற்றும் "போராளி என முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

டல்லாஸ் திமுக NRI குழுவைச் சேர்ந்த திருவா ளர்கள் சக்தி, ஆனந்த், நா. செல்வகுமார், தமிழ் மணி, சிவசுந்தரேசன், தினகரன், ராம்குமார், திருமதி. கலையரசி, திரு. சுப்பு, முத்து, பாண்டி, லாயிட், பிரடெரிக் மற்றும் டேவிட் உள்ளிட்டோர் திரளாகக் கலந்துகொண்டனர்.

திருமதி. கலையரசி மற்றும் திரு. தமிழ்மணி ஆகியோர் நன்றியுரை ஆற்றினர்.

கலிபோர்னியா (மேற்கு மண்டலம்): சான் பிரான்சிஸ்கோ வளைகுடா பகுதியில் கொண்டாட்டம்

அமெரிக்காவின் மேற்கு மண்டல அயலக அணி சார்பில், முதலமைச்சரின் பிறந்தநாள் விழா எழுச்சியுடன் முன்னெடு க்கப்பட்டது.

இந்த நிகழ்வை மேற்கு மண்டல அமைப்பாளர் சக்திவேல் மற்றும் சான் பிரான்சி ஸ்கோ (SFO) ஒருங்கிணைப்பாளர் கார்த்தி ஆகியோர் முன்னின்று நடத்தினர்.

சாவித், ஆனந்தன், பொய்யாமொழி, கார்த்திகேயன், விசயன் மற்றும் பாலாசி உள்ளிட்ட கழக உடன்பிறப்புகள் கலந்துகொண்டு "Happy Birthday Thalaivar MKS என முழங்கித் தங்கள் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

நியூஜெர்சி & வாஷிங்டன் (கிழக்கு மற்றும் மத்திய மண்டலம்): எழுச்சியான கொண்டாட்டம்

கிழக்கு மற்றும் மத்திய மண்டல அயலக அணி சார்பில் நியூஜெர்சி மாநிலத்தில் முதலமைச்சரின் பிறந்தநாள் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கிழக்கு மற்றும் மத்திய மண்டல அமைப்பாளர்கள் நியூஜெர்சி பாலா மற்றும் வாஷிங்டன் சிவா ஆகியோர் இந்த நிகழ்வி ற்கா ன ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

சான், தாமஸ், தர்மா, கோபி, இளமாறன், சிவா, பாலா, கோஷல், ரவி, பிரசாத் மற்றும் ராஜ்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். தமிழகத்தின் விடிவெள்ளியாகத் திகழும் முதலமைச்சரின் மக்கள் நலத் திட்டங்கள் குறித்துப் பெருமிதத்துடன் உரையாற்றினர்.

அமெரிக்காவின் கிழக்கு முனையிலிருந்து மேற்கு முனை வரை உள்ள பல்வேறு நகரங்களில் வாழும் தமிழர்கள், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை ஒரு திருவிழாவைப் போலக் கொண்டாடி மகிழ்ந்தனர். இந்த நிகழ்வுகள் அமெரிக்க வாழ் தமிழர்களிடையே மிகுந்த நெகிழ்ச்சியையும், தாயகத்தின் மீதான பற்றையும், கழகத்தின் மீதான உறுதியையும் மீண்டும் பறைசாற்றியுள்ளன.

# தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - தமிழக கொங்கு இளைஞர் பேரவையுடன் பேச்சு வார்த்தை!



2026 சட்டமன்ற பொதுத்தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (28.2.2026) அண்ணா அறிவாலயத்தில் தமிழக கொங்கு இளைஞர் பேரவை உ.தனியரசு தலைமையில் நிர்வாகிகள் கௌரிசங்கர், பொன் ஆனந்த்,அருள்குமார், செந்தில் குமார், மணி, நாகராஜ் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி,அறிவிப்பு!



கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகேளுக்கிணங்க "ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் தி.மு.க நிர்வாகிகள் சந்திப்பு மாநாடு வருகின்ற 09.03.2026ம் தேதி திருச்சியில் நடைபெறுவதை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக கூட்டம் நாளை (03.03.2026 செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணியளவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் ஏ.எல். சுப்பிரமணியன் தலைமையிலும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் ஆகியோர் முன்னிலையிலும், மாலையீடு அருகில் உள்ள கற்பக விநாயாகா ஏ.சி. மஹாலில் நடைபெறுகிறது.

அது சமயம் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் எஸ்.ரகுபதி**
செயலாளர்
புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க.